செ.கு. எண் :- 205 நாள் :- 03-06-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

# அறிக்கை – 3.6.2012

கடலூர் மாவட்டம், சங்கொலிக்குப்பம் கிராமம், அருள்மிகு திரௌபதி அம்மன் திருக்கோயிலில் 1.6.2012 அன்று நடைபெற்ற தீமிதி திருவிழா முடிந்து, நொச்சிக்காடு கிராமத்தைச் சேர்ந்த சுமார் 20 நபர்கள் ஒரு விசைப்படகில் திரும்பி வந்து கொண்டிருந்த போது, படகு கவிழ்ந்ததில் திரு. ராஜமாணிக்கம் என்பவரின் மனைவி திருமதி. லோகநாயகி, திரு.கர்ணன் என்பவரின் மனைவி திருமதி. ராதிகா மற்றும் திரு. தட்சணாமூர்த்தி என்பவரின் மகன் செல்வன். நடனசபாபதி ஆகிய மூன்று நபர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திருமதி. லோகநாயகி, திருமதி. ராதிகா மற்றும் செல்வன். நடனசபாபதி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான லோகநாயகி, ராதிகா மற்றும் நடனசபாபதி குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9